பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: சித்திரை 14 (26—4—58) வெள்ளி ★ வெளியூர்: சித்திரை 15 (27—4—58) சனி [இதழ்: 262

# அமெரிக்காவிலும் தமிழ் மணம் பரப்புகிறார் அண்ணா!

## யேல் பல்கலைக் கழக மாணவரிடை குறள் வகுப்பு நடத்திய காட்சி

நியூஹேவன், ஏப். 26—
தமிழக முதல் அமைச்சர் அண்ணா அவர்கள், அமெரிக்காவில் திருக்குறள் வகுப்பு நடத்தினார்.

இங்குள்ள யேல் பல்கலைக் கழகத்தில்--டிமோத்தி டுவைட் கல்லூரி முற்றத்தில்---வீசிக் கொண்டிருந்த இளம் வெயிலில்---பெஞ்சு ஒன்றின்மீது அமர்ந்து--கடந்த செவ்வாயன்று தமிழ் மறையாம் திருக்குறள் விளக்க வகுப்பு நடத்தினார்.

யேல் பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர்கள் பலர் இந்த வகுப்புக்கு வந்திருந்தனர்; அவர்களில் ஒருவர் எல். வெல்லர்ஸ் என்பார்; பல்கலைக் கழகத்தின் வானொலி நிகழ்ச்சிக்காகத் தமிழகத் தலைவரைப் பேட்டி காண்பதற்கு வந்தவர் இவர்.

அண்ணா அவர்கள் படித்துக் காட்டி விளக்கம் கூறிய திருக்குறள் பதிப்பு, தவத்திருவினர் ஜி. யூ. போப், டபிள்யூ. எச். டிரூ, ஜான் லாசரஸ், திரு. எப். டபிள்யூ. எலிஸ் ஆகியோர் ஆக்கிய ஆங்கில மொழி பெயர்ப்பாகும்.

முன்பு தமிழக உயர் நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றிய திரு. வி. சுப்பிரமணியம், இந்தப் பதிப்புக்கு முன்னுரை வழங்கியுள்ளார்.

1962-ல், சென்னையிலுள்ள சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டது, இது.

### அன்பளிப்புகள்

அமெரிக்கப் பல்கலைக் கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் அன்பளிப்பாக வழங்க இந்த மொழிப்பெயர்ப்பின் பல பிரதிகளைக் கொண்டு வந்துள்ளார் அண்ணா.

தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தின் ஆங்கில மொழி பெயர்ப்புப் பிரதிகள் பலவும் அவர் கொண்டு வந்திருக்கிறார்; டாக்டர் சி. இலக்குவனார் மொழி பெயர்த்த நூல் இது. இவையும் அன்பளிப்பாகவே வழங்கப்படும்.

"நல்வாழ்த்துக்களுடன்; சி. என். அண்ணாதுரை, எம்.ஏ., தமிழ் நாட்டு (சென்னை) முதல் அமைச்சர்" என்று இவற்றின் முகப்பில் எழுதப்பட்டுள்ளது.

இரு நூல்களும்—யேல் பல்கலைக் கழகத்துக்கும், டிமோத்தி கல்லூரிக்கும் அன்பளிப்பாக வழங்கப்படும்.

கான்சாஸ் மாநில[illegible] மன்ஹாட்டன் நகரிலு[illegible] கான்சாஸ் அரசினர் [illegible] ஹாவாய் மாநிலத்தில் ஹானலூலு நகரிலுள்ள கிழக்கு-மேற்கு நிலையம் உள்பட அமெரிக்காவில் தம்மை வரவேற்கும் மற்றக் கல்வி நிலையங்களுக்கும் இந்நூல்களை அண்ணா அவர்கள் அன்பளிப்பாக வழங்குவார்.

### தனி நிருபர்

தமிழக முதல் அமைச்சரின் யேல், வாஷிங்டன் சுற்றுப் பயணம் பற்றிச் செய்திகளைத் திரட்டி அனுப்ப தமிழக வார இதழான 'ஆனந்த விகடன்', ஒரு சிறப்பு நிருபரை ஏற்பாடு செய்துள்ளது.

விஸ்கான்சின் மாநிலத்தில் லேடிஸ்மித் என்னுமிடத்திலுள்ள ரோமன் கத்தோலிக்கக் கல்வி நிலையமான மவுண்ட் செனரியோ கல்லூரியின் இரசாயனப் பிரிவுப் பேராசிரியரான இவர், ஒரு தமிழர்; பெயர் டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி; தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

## பல கட்டங்களில் மத்திய அரசு கடன் எழுப்பும்!

புதுடில்லி, ஏப். 25—
ரூ. 175 கோடிக்குப் புதிய கடன் திட்டமொன்றை இந்திய அரசு அறிவித்திருக்கிறது.

புதிய கடன் பத்திரங்களுக்கு ஐந்தரை சதவிகித வட்டி கிடைக்கும்; 1995 மே 11-ந்தேதி திருப்பித் தரப்படும்.

"ரூ. 300 கோடிக்குக் கடன் எழுப்பப்படும்" என 1968–69 'பட்ஜெட்'டில் தெரிவிக்கப்பட்டது; 'பல கட்டங்களில் அரசு கடன் எழுப்பும்' என்பது இன்றைய அறிவிப்பிலிருந்து புலனாகிறது.

## தலைமையமைச்சரைக் கொல்ல முயற்சி

அல்ஜியர்ஸ், ஏப் 25—
அல்ஜீரியாவின் தலைமையமைச்சர் பொமிதியன் கார் இயந்திரத் துப்பாக்கியால் சுடப்பட்டபோது, அவருடைய முகத்தில் சிறிது காயமேற்பட்டது.

1965 ஜூன் திங்களில் பதவியேற்ற அவர், சிதறிய கண்ணாடித் துண்டுகளால் காயமடைந்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொண்டு திரும்புகையில் தான் இயந்திரத் துப்பாக்கியால் அவர் சுடப்பட்டிருக்கிறார்.

## ரூ. 4,709 கோடி

### மத்திய அரசின் நடப்பு ஆண்டுச் செலவு

புதுடில்லி, ஏப். 26—
மத்திய அரசின் 1968—69-ம் ஆண்டின் மொத்தச் செலவு ரூ. 4,709 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இதில், சமூக—பொருளாதாரப் பணிகளுக்கான செலவு ரூ. 2,439 கோடி (51.8 சதவிகிதம்) ஆகும்.

1966–67-ம் ஆண்டில் மொத்தச் செலவு ரூ. 4 458 கோடியாகவும், 1967–68-ல் ரூ. 4 631 கோடியாகவும் இருந்தது; அதாவது, 1967-68-ல் 3.9 சதவிகிதமும், 1968—69-ல் 1.7 சதவிகிதமும் உயர்ந்திருக்கிறது.

## குடியர்களுக்குக் காங்கிரசு ஆட்சியின் மற்றொரு சலுகை!

### 'பீர்' குடிக்கத் தடை நீங்கியது மாராட்டிரத்தில்!

பம்பாய், ஏப். 25—
பீர் விற்பனை மீது இருந்து வந்த கட்டுப்பாடுகளை மாராட்டிர அரசு நீக்கி விட்டது.

இனி, 21 வயதடைந்த எவருக்கும் லைசென்சு இல்லாமல் பீர் விற்கலாம்.

"ஐந்து சதவிகித 'ஆல்ககால்' கலந்துள்ள மதுபான வகைகளைக் கட்டுப்பாடு எதுவுமின்றி விற்க அனுமதிக்கலாம்" என்று அரசு முடிவு செய்ததையொட்டி பீர் மீதுள்ள கட்டுப்பாடு நீக்கப்பட்டிருக்கிறது.

அரசினர் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியபோதிலும், பம்பாய்க் கடைகளில் போதிய சரக்குகள் கையிருப்பில் இல்லாததால், தலைக்கு இரண்டு புட்டி வீதமே பீர் விற்கப்படுகிறதாம்.

## மாநகராட்சிக்கு ரூ. 3.57-இலட்சம்

### சுங்கச் சாவடி இழப்பீடு

சென்னை, ஏப். 25—
1968—69-ல், தமிழகத்திலுள்ள ஊராட்சிகளுக்குச் சுங்கச் சாவடி நஷ்டஈட்டுத் தொகையாக அரசு, ரூ. 20,33 328.50 அனுமதித்திருக்கிறது; இதில் சென்னை மாநகராட்சிக்கு ரூ. 3,57,000 கிடைக்கும். மதுரைக்கு ரூ. 1.34-இலட்சமும், கோவைக்கு ரூ. 72 ஆயிரமும் கிடைக்கும்.

# தென்னகத்துக்கு டெல்லி அநீதி

## நாடாளுமன்றத்தில் க. இராசாராம் கண்டனம்

புதுடில்லி, ஏப். 25—
மாநிலங்களுக்கிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகளை அகற்றும் வகையிலும், பொருளாதாரப் பிரச்சினைகளைத் தவிர்க்கும் பொருட்டும், 'மத்திய அரசின் தொழிற்கொள்கையை மறு ஆய்வு செய்து திருத்தியமைக்க வேண்டும்' என்று நாடாளுமன்ற மக்களவையில் பல்வேறு உறுப்பினர்களும் வாதிட்டனர்.

"தொழில் துறையில் பின்னடைவைத் தவிர்க்க, எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை" என அரசு மீது ஓர் உறுப்பினர் குற்றஞ்சாட்டினார்.

தொழிற்துறை — கம்பெனிகள் விவகாரத் துறை மானியக் கோரிக்கை விவாதம் நடைபெற்றது.

### க. இராசாராம்

கழக உறுப்பினர் திரு. க. இராசாராம் அவர்கள் விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் கூறியதாவது:—

"பெருந் தொழில்களை நிறுவுவதில் மத்திய அரசு ஓரவஞ்சனையாக நடந்து வருகிறது; தென்னாட்டில் ஒருசில பெரிய தொழில்களுக்கே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

"தமிழகத்தில் திரு. ஆர். வெங்கட்ராமன் தொழிலமைச்சராக இருந்தபோதே, சேலத்தில் உருக்காலை அமைக்க அவர் அனுமதி கேட்டார்; அதற்கு இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை.

"மிக விரைவில், வேலையில்லாமல் திண்டாடவிருக்கும் ஆயிரக்கணக்கான பொறியர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் வேலை வாய்ப்புக்களை உருவாக்கத்தக்கத் திட்டங்களை வகுக்க வேண்டும்."

## உறுப்பினர் உரிமைச் சீட்டு

### கழகச் செயலாளர்--அமைப்பாளர்களுக்கு முக்கிய அறிவிப்பு

தலைமைக் கழகத்தில் பதிவு செய்யப்பெற்று, அந்தந்தக் கிளையின் செயலாளர் அல்லது அமைப்பாளருக்கு அனுப்பிவைக்கப்பட்ட உறுப்பினர் உரிமைச் சீட்டுக்கள் (கார்டுகள்)—அந்தந்த உறுப்பினர்களுக்குத் தேர்தல் நாளுக்குள்—அந்தந்தக் கிளையின் செயலாளர் அல்லது அமைப்பாளரால் வழங்கப்பட்டுவிடுதல் வேண்டும்.

தலைமைக் கழகத்தால் அனுப்பிவைக்கப்பட்டு—ஆனால், அந்தந்த உறுப்பினர்களுக்கு உரிமைச் சீட்டுகளை வழங்காத செயலாளர்கள் அல்லது அமைப்பாளர்கள்மீது தலைமைக் கழகத்தால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், அவர்கள் கழகத் தேர்தல்களில் வாக்களிக்கவோ, போட்டியிடவோ உரிமை இழந்தவர்கள் ஆவர் என்பதை இதன்மூலம் வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

— தலைமைக் கழகம் (தி.மு.க.)

# அ. இ. காங்கிரசுத் தலைவர் ஆளும் மாநிலத்தில் சட்டமும் ஒழுங்கும்!

## கேரள முதலமைச்சரின் இடித்துரை

### காங்கிரசாரின் சனநாயக விரோதச் செயல் குறித்து எச்சரிக்கை

கோவை, ஏப். 26—
"இந்தியாவில் பல மாநிலங்களிலும் காங்கிரசல்லாத அமைச்சரவைகள் கவிழ்க்கப்பட்டு விட்டன; எஞ்சியுள்ள காங்கிரசல்லாத அமைச்சரவைகளையும் 'எப்போது கவிழ்க்கலாம்' என்று காங்கிரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது!

"'எப்படியாவது மீண்டும் அதிகாரத்தைப் பிடித்துவிட வேண்டும்' என்று காங்கிரசு துடித்துக்கொண்டிருக்கிறது! இந்த வெறியில், அவர்கள் சனநாயகப் பண்புகளைச் சிறிதும் மதிக்க மாட்டார்கள்"

என்று, கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு அவர்கள், இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றுகையில் தெளிவுபடுத்தினார்.

காங்கிரசல்லாத மாநிலங்களில் 'சட்டம்-அமைதி சீர்குலைந்துவிட்டது' என்று காங்கிரசார் செய்து வரும் பொய்ப் பிரச்சாரத்தை மறுத்து அவர், மங்களூரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றைச் சுட்டிக் காட்டி அதுபற்றிக் கிண்டலாகக் கூறியதாவது:—

"காங்கிரசு ஆட்சி நடைபெறும் மாநிலத்திலுள்ள மங்களூரில் தான் சட்டம்-அமைதி சீர்குலைந்துவிட்டிருக்கிறது!

"அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் பதவியையும் சேர்த்து வைத்துக்கொண்டிருக்கும் மைசூர் முதலமைச்சர் இன்னும் மங்களூர் பக்கம் போகாதது ஏனோ?"

# சென்னை மாநகரில் 120 வட்டங்கள்

## தொகுதிக்குப் பத்து வீதம் பிரிக்கப்பட்டுள்ளன

### சமூக - அரசியல் தலைவர்கள் - மறைந்த பெரியார்கள் பெயரில் வழங்கும்

ஏற்கனவே நூறாக இருந்த சென்னை மாநகராட்சி வட்டங்கள், இப்போது 120 ஆகப் பிரித்து அமைக்கப்பட்டுள்ளன.

வருகிற மாநகராட்சித் தேர்தல், இந்தப் புதிய வட்டங்களின் அடிப்படையிலேயே நடைபெறும். வட்டத்துக்கு ஓர் உறுப்பினர் வீதம் தேர்ந்தெடுக்கப்படுவதால், மாநகராட்சியின் உறுப்பினர் எண்ணிக்கையும் 120 ஆக உயரும்.

சென்னை நகரில் முன்பு 10 சட்டமன்றத் தொகுதிகள் இருந்தன; 1967 பொதுத் தேர்தலுக்குமுன் அவை 12 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டன.

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் 10 மாநகராட்சி வட்டங்கள் அடங்கும் வகையில் இப்போது புதிய வட்டங்கள் பிரித்து அமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வட்டத்துக்கும் எண்ணும் பெயரும் கொடுக்கப்பட்டிருக்கின்றன; அந்த விவரம் வருமாறு:—

### வண்ணைத் தொகுதி

வட்ட எண் பெயர்

1. தண்டையார்பேட்டை
2. ம. பொ. சி. நகர்
3. கிரேஸ் கார்டன்
4. சஞ்சீவிராயன்பேட்டை
5. மொட்டைத் தோட்டம்
6. நாராயணப்பநாய்க்கன் தோட்டம்
7. சிங்காரத் தோட்டம்
8. இராயபுரம்
9. மீனாட்சியம்மன்பேட்டை
10. பழையவண்ணாரப்பேட்டை

### துறைமுகத் தொகுதி

11. ஏழுகிணறு (வடக்கு)
12. அம்மன்கோவில் (வடக்கு)
13. முத்தியாலுப்பேட்டை
14. வள்ளல் சீதக்காதி நகர்
15. மண்ணடி
16. அம்மன்கோவில் (தெற்கு)
17. ஏழுகிணறு (தெற்கு)
18. சவுகார்பேட்டை
19. கொத்தவால்சாவடி
20. கச்சாலீசுவரர்

### பேசின்பிரிட்ஜ் தொகுதி

21. டாக்டர்இராதாகிருஷ்ணன் நகர்
22. ஜீவா நகர்
23. செரியன் நகர்
24. கொருக்குப்பேட்டை
25. குமாரசாமி நகர்
26. டாக்டர் விசயராகவலு நகர்
27. பேசின்பிரிட்ஜ்
28. கொண்டித்தோப்பு
29. பெத்துநாயக்கன்பேட்டை
30. பெருமாள்கோவில் தோட்டம்

### பூங்கா நகர்த் தொகுதி

31. கொசப்பேட்டை
32. பெருமாள்பேட்டை
33. கண்ணப்பர் நகர்
34. அன்பழகன் நகர்
35. சூளை
36. பெரியமேடு
37. யானைகவுனி
38. நேதாஜி நகர்
39. எடப்பாளையம்
40. பார்க் டவுன்

### பெரம்பூர்த் தொகுதி

41. வியாசர்பாடி
42. இளங்கோ நகர்
43. பெரம்பூர்
44. திரு. வி. க. நகர்
45. வாடியா நகர்
46. டாக்டர்சத்தியவாணிமுத்து நகர்
47. புளியந்தோப்பு
48. டாக்டர் பெசண்ட் நகர்
49. பட்டாளம்
50. தட்டாங்குளம்

### புரசைத் தொகுதி

51. செம்பியம்
52. அகரம்
53. சிறுவள்ளூர்
54. 'விடுதலை' குருசாமி நகர்
55. நாகம்மையார் நகர்
56. அயனாவரம்
57. பன்னீர்செல்வம் நகர்
58. மறைமலை அடிகள் நகர்
59. அஞ்சுகம் அம்மையார் நகர்
60. புரசைவாக்கம்

### எழும்பூர்த் தொகுதி

61. அண்ணா நகர்
62. ஷெனாய் நகர்
63. நுங்கம்பாக்கம்
64. கீழ்ப்பாக்கம்
65. சேத்துப்பட்டு
66. கங்காதீசுவரர்கோயில்
67. டாக்டர் அம்பேத்கார் நகர்
68. எழும்பூர்
69. புதுப்பேட்டை
70. கோமளீசுவரன் பேட்டை

### ஆயிரம்விளக்குத் தொகுதி

71. ஆயிரம்விளக்கு
72. அழகிரி நகர்
73. பாலசுப்பிரமணியம் நகர்
74. அமீர் மகால்
75. உமறுப் புலவர் நகர்
76. பாரதி நகர்
77. ஆஜாத் நகர்
78. இராயப்பேட்டை
79. பாரதிதாசன் நகர்
80. கிருஷ்ணாம்பேட்டை

### திருவல்லிக்கேணித் தொகுதி

81. ஆதிகேசவபுரம்
82. சிந்தாதிரிப்பேட்டை
83. நரசிங்கபுரம்
84. நேரு நகர்
85. திருவட்டீசுவரன்பேட்டை
86. சேப்பாக்கம்
87. டாக்டர் நடேசன் நகர்
88. ஜாம் பஜார்
89. திருவல்லிக்கேணி
90. மெரினா

### மயிலாப்பூர்த் தொகுதி

91. விவேகானந்தாபுரம்
92. மாதவபெருமாள்புரம்
93. காரனேசுவபுரம்
94. சாந்தோம்
95. மைலாப்பூர்
96. திருவள்ளுவர் நகர்
97. பீமண்ணன்பேட்டை
98. ராஜா அண்ணாமலைபுரம்
99. அவ்வை நகர்
100. அடையாறு

### தியாகராய நகர்த் தொகுதி

101. கோ. சு. மணி நகர்
102. கலைவாணர் நகர்
103. நக்கீரர் நகர்
104. தேனாம்பேட்டை
105. தியாகராய நகர்
106. ராஜாஜி நகர்
107. கலைஞர் கருணாநிதி நகர்
108. வ.உ.சி. நகர்
109. சத்தியமூர்த்தி நகர்
110. ஆழ்வார்பேட்டை

### சைதாப்பேட்டைத் தொகுதி

111. அமைந்தகரை
112. பெரியார் நகர்
113. வட பழனி
114. நாவலர் நெடுஞ்செழியன் நகர்
115. எம்.ஜி.ஆர். நகர்
116. காமராஜ் நகர்
117. குமரன் நகர்
118. சைதாப்பேட்டை
119. ஜி. டி. நாயுடு நகர்
120. கிண்டி

# ஆகஸ்ட் 23-ல் மாநகராட்சித் தேர்தல்

## அமைச்சர் முத்துசாமி அறிவிப்பு

சென்னை, ஏப். 15—

"சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலை ஆகஸ்டு 23-ம் நாள் நடத்துவது என்று தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது" என, உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அறிவித்தார்.

சென்னை நகர வட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன; இதன்படி மொத்தம் 120 வட்டங்கள் உள்ளன; ஒவ்வொரு வட்டத்துக்கும் ஓர் உறுப்பினர் வீதம் 120 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

தேர்தல் அட்டவணை வருமாறு:—

**சூலை 31, ஆகஸ்டு 1, 2 ஆகிய நாட்களில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யலாம்.**

**ஆகஸ்டு 3-ம் நாள் வேட்பு மனுக்கள் ஆய்வு செய்யப்படும்.**

**வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறக் கடைசி நாள் ஆக. 6.**

**வாக்குப் பதிவு ஆக. 23.**

மாற்றியமைக்கப்பட்டுள்ள 120 வட்டங்களின் விவரம், அரசினர் கெஜட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

வட்டங்களைப் பிரித்து அமைப்பது தொடர்பாகப் பொதுமக்களின் கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்பட்டன" என வட்டங்கள் மாற்றம் தொடர்பான அரசின் ஆணையில் கூறப்பட்டிருக்கிறது.

### நகராட்சித் தேர்தல்கள்

**நகராட்சிகளுக்குத் தேர்தல்களை நடத்துவதற்கான அட்டவணை தயாரிக்கப்படுகிறது.**

**இப்போதைய நிலவரப்படி இந்த ஆண்டு செப்டம்பர்—அக்டோபரில் அந்தத் தேர்தல்கள் நடக்கும் என்று தெரிகிறது.**

# காஞ்சிபுரம்—

## மாவட்டத் தலைநகராகிறது

சென்னை, ஏப். 25—

"செங்கற்பட்டு மாவட்டத் தலைமை அலுவலகத்தை, சைதாப் பேட்டையிலிருந்து காஞ்சிபுரத்திற்கு மாற்ற அரசு முடிவு செய்துவிட்டது; இதற்கான ஏற்பாடுகள் இறுதியாக்கப்பட்டுவிட்டன" என்று, அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள் தெரிவித்தார்.

# உணவு உற்பத்தியைப் பெருக்கத் தீவிரத் திட்டம்

சென்னை, ஏப். 26—

1968—69-ம் ஆண்டுக்கான விரிவான உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டம் வகுப்பதற்கு, அமைச்சர்கள்மட்ட மாநாடு ஒன்று ஏப். 30-ம் நாள் நடைபெறும்.

இந்த மாநாட்டில் உணவுத் துறை—பொதுப் பணித் துறை—வேளாண்மைத் துறை—கூட்டுறவுத் துறை அமைச்சர்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கலந்துகொள்வர்.

இந்தத் திட்டத்தின்கீழ் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் இரு போக நிலங்களின் பரப்பை 2.5-இலட்சம் ஏக்கரிலிருந்து 5.6-இலட்சம் ஏக்கராக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

விடுமுறையிலிருந்து கட்டாய அழைக்கப்பட்ட உணவு உற்பத்திக் கமிஷனர் திரு. இ. பி. ராயப்பா, ஏற்கனவே இந்த வேலையில் முனைந்துள்ளார்; அவர் இது பற்றி ஏப். 13-ம் நாள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் முதல் கட்டப் பேச்சு நடத்தி முடித்துவிட்டார்.

"ஒரு போக நிலங்களை இரு போகமாக்குவது-சிறு பாசன வசதிகளைத் தீவிரமாக்குவது-கிணற்று மானியத் திட்டம் போன்று நல்ல பலனளிக்கக் கூடிய திட்டங்களில் முனைந்து எல்லாத் துறைகளிலும் முழு முயற்சி எடுத்துக்கொண்டால்தான், உணவுப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும் என்பதைக் கருத்திற் கொண்டு அடுத்த ஆண்டு திட்டம் வகுக்கப்படும்"

என்று உணவுத் துறை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் கூறினார்.

"முதல்—இரண்டாம் போகங்களுக்கு உற்பத்திக் குறிக்கோள், விதை—நாற்றுத் தேவைகள், ஆயக் கட்டுகள் அமைப்பு பாசன—கடன் வசதிகள், ரெவின்யூ-பொதுப் பணித் துறை முயற்சிகளை இணக்கமாக்குதல் போன்றவைகளை முதலில் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்" என்று அவர் சொன்னார்.

# பள்ளிகட்டு வெள்ளையடிக்க சீரணியினர்!

## ஊராட்சி ஒன்றியங்கட்கு அரசு ஆலோசனை

சென்னை, ஏப். 25—

ஆங்காங்கு உள்ள தொடக்கப் பள்ளிகளுக்குச் சுண்ணாம்பு அடிக்கச் [illegible]ணியின் பணியைப் பயன்படு[illegible]க் கொள்ளுமாறு ஊரா[illegible] ஒன்றியங்களுக்கு [illegible] அறிவித்திருக்கிறது.

இதற்கான சாதனங்களை உள்ளூர்களில் உள்ள செல்வந்தர்களிடமிருந்து நன்கொடையாகப் பெறுமாறும் கூறப்பட்டிருக்கிறது.

வெள்ளையடிக்கும் வேலையை, விடுமுறை நாட்களில் தொடங்கி மே மாத முடிவுக்குள் முடித்து விடுமாறும் யோசனை கூறப்பட்டுள்ளது.

"இந்த ஏற்பாட்டினால் அரசுக்கு வெள்ளையடிக்கும் செலவே இராது" என்று அமைச்சர் திரு. முத்துச்சாமி கூறினார்.

"பள்ளிகளில் தகுந்த இடங்களில் குறட் பாக்களைப் பொறித்து, திருவள்ளுவர் படமும் வைக்கலாம்" என்றும் அமைச்சர் யோசனை கூறினார்.

கோடை விடுமுறையின்போது சீரணியினர், ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள சிறிய பாசன ஏரிகளில் தூர் வாரும் வேலைகளையும் மேற்கொள்வார்கள்.

# சேலம்—பெங்களூர் இரயில் பாதை

## ஆகஸ்டுத் திங்களுக்குள் அமைக்கப்பட்டுவிடும்

சென்னை, ஏப். 25—

"சேலம்—பெங்களூர் இரயில் பாதை, இந்த ஆண்டு ஆகஸ்டுக்குள் முடிவடைந்துவிடும்" என்று, மத்திய இரயில்வே அமைச்சர் சி. பூனச்சா, நிருபர்களிடம் கூறினார்.

இப்போது சேலத்திலிருந்து தருமபுரி வரையில் இரயில் பாதை இருக்கிறது.

மேட்டுப்பாளையத்திலிருந்து உதகமண்டலத்துக்குச் செல்லும் இரயில் பாதையை எடுத்துவிடும் உத்தேசம் பற்றிக் கேட்டபோது அவர் குறிப்பிட்டதாவது:—

"அந்தப் பாதையை உடனடியாக எடுத்துவிட எண்ணவில்லை; அப்பாதையை நீக்குவதற்கு முன்னதாக, அப்பிரிவின் போக்குவரத்துப் பற்றி அவ்வப்போது பரிசீலிக்கப்படும்."

# குறியளவை எட்டுகிறது கொள்முதல்

## அமைச்சர் மதியழகன் அறிவிப்பு

சென்னை, ஏப் 26—

'அண்மையில் அறுவடையான சம்பாப் பயிரில் 5 இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்ய வேண்டுமென அரசினர், இலக்கு நிர்ணயித்திருந்தனர்; இதில், ஏப் 21-ம் நாள்வரையில் 4,16,270 டன் கொள்முதல் செய்யப்பட்டுவிட்டது"

என்று, உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் இன்று கூறினார்.

கோவை, செங்கற்பட்டு, தென்னாற்காடு, மாவட்டங்களில் கொள்முதல் முடிவடைந்துவிட்டது.

தஞ்சாவூரில் 2.5 இலட்சம் டன்னுக்கு 2.14 இலட்சம் டன் கொள்முதலாகிவிட்டது.

# நிக்கல் நாணயங்கள் அனைத்தும் செல்லும்

## ரிசர்வ் பாங்கி விளக்கம்

சென்னை, ஏப். 25—

ரிசர்வ் பாங்கியில் அதிகாரி ஒருவர் இன்றுபின்வருமாறு கூறினார்:—

"எல்லா நிக்கல் நாணயங்களும் எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இன்றி செல்லத்தக்கவை; ஆனால், 1947-ம் ஆண்டிற்குமுன்பு வெளியிடப்பட்ட வெள்ளி நாணயங்கள் செல்லாது; ஆனால் அவற்றைக் கொடுக்கிறவர்கள், தாமதத்திற்குக் கூறும் காரணம் திருப்திகரமாக இருந்தால், அவற்றை ரிசர்வ் பாங்கி ஏற்றுக் கொள்ளும்.

"நிக்கல் நாணயங்களைப்பற்றிக் குறிப்பாகக் கிராமங்களில் குழப்பமான நிலைமை ஏற்பட்டுள்ளதாக அண்மையில் மத்திய அரசுக்குத் தகவல் கிடைத்தது. மக்கள் மனதிலிருந்து சந்தேகம் அகலுவதற்காகத் தெளிவான அறிக்கைகளை வெளியிடுமாறு பல்வேறு மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அறிக்கை அனுப்பியது.

திருச்சி, ஏப் 25—

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிப்பிலும் ஆசிரியைகளுக்கு 5 வீடுகள் கட்ட மாநிலத்திலுள்ள எல்லா ஊராட்சி ஒன்றிப்புகளுக்கும் தமிழக அரசு அனுமதி வழங்கியிருக்கிறது.

# காங்கிரசு ஆளும் மாநிலத்தில் சட்டம்--ஒழுங்கு படும்பாடு!

## கட்டிடங்கள் நாசம் - மோட்டார்கள் தீக்கிரை

### ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள உடைமைகள் பாழ்

மங்களூர், ஏப். 25—

**“அண்மையில் மங்களூரில் ஏற்பட்ட கலவரங்களில் சுமார் ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் அழிக்கப்பட்டன!**

**“கடைகள், வீடுகள், வழிபாட்டு இடங்கள் உட்பட சுமார் 30 கட்டிடங்கள் கலவரங்களில் மிகவும் சேதமடைந்தன!**

**“ஸ்கூட்டர்கள், லாரிகள் உட்பட 12 மோட்டார்கள் கொளுத்தப்பட்டன!**

**“சேதத்தின் மொத்த மதிப்பு ரூ. 5 இலட்சத்திற்கு அதிகமாக இருக்கலாம்.**

**“கலவரங்கள் சம்பந்தமாக 30 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன!**

**“438 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்!”**

இத்தகவலை, மைசூர் உள்துறை அமைச்சர் ஆர்.எம். பாட்டில் அறிவித்துள்ளார்.

## எழில்மிகு பஸ் நிலையங்கள்

### கடற்கரையில் எட்டு இடங்களில் கட்டப்படும்

சென்னை, ஏப். 26—

உலகப் புகழ்பெற்ற சென்னைக் கடற்கரையின் அழகுக்கேற்ற முறையில் அங்கு எட்டு பஸ் நிலையங்களைக் கட்டத் தமிழக அரசுப் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

எட்டு நிலையங்களும் நவீன அமைப்பாக இருக்கும்; பசுமையான கொடிகள் பிரயாணிகள் நிற்கும் நிலையங்களின் கூரையின் மேல் படரவிடப்படும்; இருபுறமும் பூந்தொட்டிகள் அலங்கரிக்கும்; செக்கச் சிவந்த செங்கற் கட்டிடங்கள் அமையும்.

மரினாவில் இப்போது மூன்று பஸ் நிலையங்களே உள்ளன; எட்டு புது நிலையங்களுக்காகக் குறித்துள்ள இடங்கள் பொதுப்பணித் துறை முடிவாக அங்கீகரித்தபின், நிலையங்களைக் கட்டும் வேலை துவங்கும்.

புது நிலையங்களைக் கட்டுவதற்கு நன்கொடை தருவதாகச் சிலர் தெரிவித்துள்ளனர்.

இப்போது நடந்த தணிக்கையிலிருந்து முக்கியமான இடங்களில் பஸ் பயணிகள், காத்திருப்பதற்காக சிமெண்டுக் கொட்டகைகள் உள்ளன; இன்னும் 200 இடங்களில் கட்டவேண்டியுள்ளது; இவற்றைக் கட்டுவதற்கான பொறுப்பை வகிக்கும் மாநகராட்சிமன்றம், பராமரிக்கும் பொறுப்பையும் ஏற்றுள்ளது. கடந்த 10 மாதங்களுக்குள் 65 சிமெண்டு கொட்டகைகளைக் கட்டியுள்ளது.

நன்கொடையாளர், ஒவ்வொரு கொட்டகைக்கும் ரூ. 1,000 செலவிடுகிறார்கள்.

தங்கள் வீடு அல்லது கட்டிடத்திற்கு எதிரில் பஸ் நிலையக் கொட்டகைகள் கட்டுவதைச் சிலர் எதிர்த்ததால், ஆங்காங்கு வேலைகள் தாமதப்படுவதாகத் தெரிகிறது.

## முன்னாள் முதலமைச்சர் தேர்தல் செல்லாது

புதுடில்லி, ஏப். 25—

பஞ்சாப் மாநில முன்னாள் காங்கிரசு முதலமைச்சர் இராம் கிஷன், நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது செல்லாது' என இந்தியத் தலைமை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

இதற்குமுன், பஞ்சாப் — அரியானா உயர் நீதிமன்றம், 'ராம் கிஷன் தேர்வு செல்லாது' என அறிவித்திருந்தது: அதன் முடிவை எதிர்த்து ராம் கிஷன் இந்தியத் தலைமை நீதிமன்றத்தில் தொடர்ந்த அப்பீலில்தான் மேற்கண்ட தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

## உ.பி. அரசின் உத்தரவு

லக்னோ, ஏப். 26—

“அடுத்த ஆறு திங்களுக்குப் பொதுத்துறை நிறுவனம் எதுவும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடக் கூடாது”

என உத்தரப் பிரதேச மாநில அரசு தடை விதித்திருப்பதாகத் தெரியவருகிறது.

## சர்க்கரை உற்பத்தியில் உயர்வு

புதுடில்லி, ஏப். 26—

இந்த ஆண்டு ஏப்ரல் 15-ந் தேதி வரையில் 21.44 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டின் சர்க்கரை உற்பத்தி 20.81 இலட்சம் டன் ஆகும்.

## ரூ. 2 இலட்சம் வரி ஏய்ப்பு

### இந்தி நடிகைமீது வழக்கு

பம்பாய், ஏப் 25—

இந்தித் திரைப்பட நடிகை ஆஷா பரேக், ரூ 2 இலட்சம் வரையில் வரி செலுத்தாமல் ஏய்த்துள்ளதாக அவர்மீது வருமான வரித் துறை நீதிமன்றத்தில் புகார் தாக்கல் செய்திருக்கிறது.

## இலங்கை அகதிகளுக்கு அந்தமானில் இடம்

### டெல்லி அதிகாரிகள் பார்வையிட்டு வந்தனர்

சென்னை, ஏப். 26—

இலங்கையிலிருந்து வெளியேற்றப்படும் தமிழர்களை அந்தமானில் குடியமர்த்தும் திட்டம், அந்தமானில் படகுத் துறையமைப்பு வேலைகளும் செய்திப் போக்குவரத்து மேம்பாட்டு வேலைகளும் முடிந்த பின்னரே செயல்படுத்தப்படுமாம்.

இலங்கைத் தமிழர்களை அந்தமானில் குடியமர்த்துவதற்காக இருவர் அடங்கிய குழு ஒன்று அந்தமானுக்குச் சென்று வந்தது; உள்துறை அமைச்சகச் செயலாளர் திரு. ஏ. வெங்கடேசனும், துணைச் செயலாளர் திரு. பி. முராரியும் இந்தக் குழுவில் இருந்தனர்.

திரு. வெங்கடேசன் கூறியதாவது:—

“அந்தமான் தீவுகளில் பல இடங்களைப் பார்வையிட்டோம் இம்மாத இறுதிக்குள், குழுவின் பரிந்துரைகள் அரசிடம் அளிக்கப்படும். நாங்கள் சென்று பார்த்த தீவுகளில், கட்சால் தீவுதான் மிகவும் பொருத்தமானதாகக் காணப்படுகிறது. அந்தத் தீவின் தட்பவெப்ப நிலை மலேசியாவின் தட்பவெப்ப நிலையைப்போல் உள்ளது. அங்கு ரப்பர் தோட்டம் வேலையும் ஏற்கனவே தொடங்கிவிட்டது.

“சிறிய அந்தமான், காடுகள் நிரம்பியதாக உள்ளது நல்ல மர வகைகள் அங்கு இருக்கின்றன. பழங்குடி மலைவாசிகள் வசிக்கும் பெரிய நிக்கோபாரில் நான்கு ஜீவநதிகள் பாய்கின்றன. நல்ல அழகான பள்ளத்தாக்குகள் உள்ளன. அந்தப் பகுதியையும் குடியிருப்புக்குத் தக்கபடி மேம்படுத்த முடியும்.”

## சைதை வட்டத் தோழர்கட்கு :

“திருப்பெரும்புதூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு பி. சிவசங்கரன் அவர்களுக்குக் கார் பரிசளிப்புக்கான நன்கொடை டிக்கெட்டுப் புத்தகங்கள் பெற்றுள்ள தோழர்கள், வசூலான தொகையை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

“மே மாதம் இரண்டாவது வாரத்தில் நிதியளிப்பு விழா, விருகம்பாக்கத்தில் நடைபெறும் ; அவ்விழாவில், அவரவர் பங்குத் தொகையை அறிவிக்க வேண்டியிருப்பதால், உடன் ஆவன செய்ய வேண்டுகிறேன்”

என, சைதை வட்டச் செயலாளர் சி. இராமலிங்கம் அறிவிக்கிறார்.

## திருவொற்றியூர் நகர தி.மு.க. உறுப்பினர்கட்கு:

“திருவொற்றியூர் நகரத்தில் வார்டு வாரியாக வார்டு கிளைகள் அமைக்கத் தீர்மானித்திருப்பதால், ஆங்காங்கு வசிக்கும், கழக உரிமைச் சீட்டுள்ளவர்கள், அந்தந்த வார்டுகளில் அமைந்திருக்கும் துணைமன்றங்களில் பதிவுசெய்து கொள்ளலாம். துணைமன்றம் இல்லாத வார்டுகளில் நகராட்சிக் கழக உறுப்பினர் மூலமாகவும் அல்லது நகரக் கழக நிர்வாகிகள் மூலமாகவும் அந்தந்த வார்டுகளில் வார்டு கிளைகளைத் துவக்க ஆவனசெய்ய வேண்டுகிறேன்”

என்று திருவொற்றியூர் நகரத் தி. மு. க. செயலாளர் வை. பார்த்தசாரதி அறிவிக்கிறார்.

## திருத்தணி வட்ட தி. மு. க. கிளைகளுக்கு:

தலைமைக் கழக அறிக்கையின்படி, திருத்தணி வட்டத்திலுள்ள ஒவ்வொரு கிளையும் அதன் செயற்குழு கூட்டத்தைக் கூட்டி, கழகத்தின் சொத்துக்களை ஒப்படைக்கும் வகையில் முடிவு செய்துகொள்வதுடன், திருத்தணி வட்டத்தில் 1965-ம் ஆண்டு முதல் 1668-ம் ஆண்டுவரை தலைமைக் கழகத்தில் முறைப்படி பதிவு செய்யப்பட்ட கிளைகள், 30—4—68-க்குள் தங்கள் கிளையின் முகவரியைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள் :—

என். கே. எஸ். கணேசன், அமைப்பாளர், திருத்தணி வட்டத் தி. மு. க., பொதட்டூர்பேட்டை அஞ்சல்.

## தமிழ்க்குடிமகன் எம்.ஏ.

### சுற்றுப்பயணம்

மே. 27 : சூராணம், அளவிடங்கான் ; 28 : போடிநாயக்கனூர் ; 29 : பாண்டியூர் ; 30 : வெங்கிட்டன் குறிச்சி.

மே 1 : பார்த்திபனூர் ; 6 : சாலைக் கிராமம் ; 7 : கொட்டகுடி ; 10 : பரம்பூர் ; 11 : தவளைக்குளம்.

## க. அறிவழகன் பதவியேற்பு

சென்னை, ஏப். 24—

சென்னை—செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதியிலிருந்து சட்டமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. க. அறிவழகன் அவர்கள், இன்று மேலவைத் தலைவர் முன்னிலையில் பதவி உறுதிமொழி எடுத்துக்கொண்டார்.

### ஆங்கிலத்தில்

## அண்ணா மலர்!

**‘பேரறிஞர் அண்ணா அவர்களின் அறுபதாவது பிறந்த நாள் விழாவினையொட்டி ஓர் உயர்ந்த ஆங்கில மலரை வெளியிடமுனைந்துள்ளேன்; அதற்கு இயக்கத் தோழர்களின் ஒத்துழைப்பைப் பெரிதும் வேண்டுகிறேன்”**

என, திரு. ஏ. பி. சனார்த்தனம் எம்.ஏ., எம்.எல்.சி. அறிவிக்கிறார்.

## நடக்க இருப்பவை -- பொதுக்கூட்டங்கள்

### 27--4--68

**தம்மம்பட்டி**

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு அண்ணா திடலில் ; தலைவர் : சி. காங்கமுத்து ; பேசுவோர் : க. அன்பரசு, மு. மாரிமுத்து எம்.எல்.ஏ., ஜி. என். பெரியசாமி, புலவர் ஆ. பெரியசாமி.

**சென்னம்பட்டி**

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு மாரியம்மன் திடலில் ; தலைவர் : கு. இரங்கசாமி ; பேசுவோர் : ஈ. எம். நடராசன் எம்.எல்.ஏ., ஆ. திராவிடமணி, சிவ. நடராசன் ஆ. வெற்றிவேல், அ. க. துரைராசு, கு. சி குருமூர்த்தி.

**மதுரை**

கருணாநிதி படிப்பகத் துவக்க விழா ; மாலை 7-மணிக்கு வடக்கு மாசி வீதியில் (ராக்கப்பன் சாவடி அருகில்) ; தலைவர் : எம். நடராசன் ; திறப்பாளர் : எஸ். முத்து எம்.எல்.சி., பேசுவோர் : சொ. கோவிந்தராசன் எம்.எல்.ஏ., கு திருப்பதி பி.ஏ., பி.எல்., எழில்விழியன், தேவகி பாண்டியன், மதுரை வீரன் எம்.சி., அ. பிச்சை, கே. பெரியாண்டி.

**போடிநாயக்கனூர்**

அண்ணா மன்ற முதலாம் ஆண்டு விழா ; மாலை 7-மணிக்கு அண்ணா திடலில் (பழைய பஸ் நிலையம்) ; தலைவர் : எஸ். ஆர். சுப்பையா ; பேசுவோர் : மு. சுருளிவேல் பி.ஏ., செ. தம்பித்துரை, வெ. கண்ணன். (எம். ஜி. ஆர். கலைக் குழுவின் ‘ஏழை அழுத கண்ணீர்’ என்ற கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

### 28--4--68

**திருவரங்கம்**

அண்ணா மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு சிங்கர் கோயில் தெருவில் ; தலைவர் : கே. இராசவேலு எம்.ஏ.பி.எல். ; பேசுவோர் : நன்னிலம் நடராசன், எம். எஸ். மணி எம்.எல்.ஏ., ஜி. பாரங்குசம் எம்.எல்.சி., எஸ். நெடுமாறன், எஸ். எம். வி. சாமி, டி. துரைசாமி.

**சென்னை முதல் வட்டம்**

எம். ஜி. ஆர். மன்ற இரண்டாவது ஆண்டுவிழா ; மாலை 7-மணிக்கு அருணாசல ஈசுவரர் கோயில் திடலில் ; தலைவர் : ஏ. எஸ். அருணாசலம் ; பேசுவோர் : மதுரை கூடலரசன், இளம்பரிதி, எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., கு. இராமலிங்கம் எம்.சி., சேரளியன், மு. வரதராசன் து. கோவிந்தசாமி.

**சேந்தமங்கலம்**

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு பெருமாள் கோயில் திடலில் ; தலைவர் : இரா. வரதராசன் ; பேசுவோர் : வெ. கண்ணன், அ. இளங்கோவன், ந செ. சுப்பராயன், ஆ நடராசன், ஐ. இராமசாமி, இராசலிங்கம், ஆர். எம். பழனிமுத்து.

**இராவத்தூர்**

எம். ஜி. ஆர். மன்ற ஆண்டு விழா ; இரவு 8-மணிக்கு ; தலைவர் : இரா. கு. இராமசாமி ; பேசுவோர் : சி. தமிழரசி பி.ஏ., மற்றும் பலர்.

**அருப்புக்கோட்டை**

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு தியாகராயர் திடலில் ; தலைவர் : ஆ. குருசாமி ; பேசுவோர் : எம். எஸ். இராமசாமி, சிவ. சண்முகசுந்தரனார், ப. பெ. க. நல்லதம்பி. (தேவராசன்—நிர்மலா குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

**நித்தாம்பேட்டை**

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு, அண்ணா அரங்கில் ; தலைவர் : இரா. பக்கிரிசாமி; பேசுவோர் : ந. தர்மலிங்கம், எம். எல். ஏ., ச. தியாகராசன் பி.ஏ. பி.எல்., இரா. கல்யாணசுந்தரம், பொ. கணபதி, இரா. தேவராசன், ச. கலையழகன், செயராமன் (மதுரை கண்ணம்மா—தங்கராசு குழுவினரின் ‘பூத்தது பொற்காலம்’ என்ற கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

**மதுரை**

13-வது வட்டம் தியாகி சின்னச்சாமி நினைவு மறை மூன்றும் ஆண்டு விழா ; மாலை 7-மணிக்கு பச்சை நாச்சியம்மன் கோயில் தெருவில் ; தலைவர் : எம். பட்டுராசன் பி.ஏ.பி.எல்., பேசுவோர் : எஸ். கஸ்தூரி பி.எஸ்.சி., கு. திருப்பதி பி.ஏ.பி.எல்., சொ. காவேரிமணியம் பி. எஸ். சி., பி.எல்., கா. காளிமுத்து பி.ஏ., எழில் விழியன் பி.ஏ.,

**கரூர்**

16, 17-வது வட்ட தி. மு. க. கிளைகள் சார்பில் மாலை 7-மணிக்கு மாவடியான் கோயில் தெரு அண்ணா திடலில் ; தலைவர் : ஆர். உசேன்கான் ; பேசுவோர் : கே. இராசாமுகம்மது பி.ஏ., என். ஆர். இராமசாமி, பரமத்தி சண்முகம், ஆர். மாரிமுத்து, கே. ஆர். நாராயணன், சி. ப. தேவராசன்.

**நெல்லிக்குப்பம்**

சிங்கத் தமிழன் சின்னச்சாமி மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு சம்புலிங்கம் பூங்காத் திடலில் ; தலைவர் : வீ. இளங்கோ ; பேசுவோர் : ஆ. அண்ணாமலை, ஏ. வி. தண்டபாணி, சி. பாலவேலாயுதம், ச. இராசகோபால், துரை. அன்பரசன், வா. வீரராகவன், கோ. கங்காதரன், சி. வரதராசன்.

**அவனியாபுரம்**

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு மந்தைத் திடலில் ; தலைவர் : தியாகையா ; பேசுவோர் : அக்கினிராசு எம்.எல். ஏ., ஒ. பி. இராமன் எம்.எல்.ஏ., பி. எஸ். மணியன் எம்.எல்.ஏ., கு. திருப்பதி பி.ஏ.,பி.எல்., காவேரிமணியன், எஸ். காமராஜ், கே. எஸ். சந்தானம் எம்.சி., மற்றும் பலர்.

**ஆலந்தூர்**

பேராசிரியர் அன்பழகன் மன்றத் திறப்பும், க. அறிவழகன் எம்.எல்.சி. அவர்களுக்குப் பாராட்டும் ; மாலை 6-30 மணிக்கு பருத்திவாக்கம் தெருவில் ; தலைவர் : கே. லோகநாதன் ; பேசுவோர் : காஞ்சி கல்யாணசுந்தரம், எஸ். பாலன், இர. கோதண்டராமன், நா. இராமதாஸ், ஆர். எஸ். பாரதி, ஆ. அருணகிரி, சி. தருமன், மற்றும் பலர்.

**மதுரை நகர்**

2-வது வட்டார தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு சம்புரோபுரத்தில் (கோரிப்பாளையம்); தலைவர் : மு. நடராசன் ; பேசுவோர் : எஸ். முத்து எம்.எல்.சி., டாக்டர் ஏ. அருணாசலம், சி. கோவிந்தராசன் எம்.எல்.ஏ., கே. எஸ். சந்தானம் எம்.சி., கே. கே. இராசாங்கம், டி. பி. சோணை, மு. பாலகிருஷ்ணன், மு. முத்து.

**சென்னை 4-வது வட்டம்**

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு சஞ்சீவிராயன் கோயில் தெருவில் ; தலைவர் : ஏ. கணேசன் ; பேசுவோர் : துரைமுருகன், துரை கலியபெருமாள், செல்வி கஸ்தூரி, என். வி. என். செல்வம், அரங்கசாமி, ஆண்டியப்பன், மு. வேதாசலம் எம்.எல்.ஏ., பி. கே. மூர்த்தி, கே. முத்து.

# அனைத்துக் கட்சி மே நாள் விழா

[1–5 68]

★

## ஊர்வலத்தில் முழக்கப்பட வேண்டிய முழக்கங்கள்

மே நாள் தத்துவம் வெல்க!

உலகத் தொழிலாளர்களே—ஒன்று சேருங்கள்!

நிற வெறி ஒழிக!

மாநில அரசுகளுக்கு அதிக உரிமைகள் வேண்டும்!

ஆட்டொமேஷன் முறைகளைப் புகுத்தாதே!

ஆட் குறைப்புச் செய்யாதே!

அதிக வேலை வாங்காதே!

மார்டின் லூதர் கிங் கொள்கை வெல்க!

மார்டின் லூதர் கிங் நாமம் வாழ்க!

கதவடைப்புச் செய்யாதே!

தபால்—தந்திக் கட்டணத்தை உயர்த்தாதே!

இரயில்வே கட்டணத்தைக் குறை!

வியட்நாமில் சனநாயகம் வெல்க!

வியட்நாம் மண்ணிலிருந்து எல்லா அந்நியப் படைகளும் வெளியேறுக!

ஊதிய போர்டு முடிவுகளைச் செயல்படுத்து!

வாழ்க்கைத்தரப்புள்ளிகளுக்கு ஏற்ற பஞ்சப் படியை வழங்குக!

தொழிலாளர் — விவசாயிகள் தோழமை வளர்க!

தொழிலாளர் — மாணவர் தோழமை வளர்க!

நியாயமான போனசு வழங்குக!

பாங்கிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் தொழிலாளர் விரோதப் பிரிவை ரத்து செய்க!

உலக சமாதானம் ஓங்குக!

—மே நாள் விழா அனைத்துக் கட்சிக் குழு

[குறிப்பு:—1—5—68 அன்று நாடெங்கும் நடைபெறும் மே நாள் விழா ஊர்வலங்களில் மேலே குறிப்பிட்டுள்ள முழக்கங்களைத் தவிர வேறு எவ்வித ஒலி முழக்கங்களும் எழுப்புதல் கூடாது என்று வேண்டிக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.]

## குழுக் கூட்டங்கள்

### சேலம் வட்டம்

சேலம் வட்ட தி. மு. க உறுப்பினர்கள் கூட்டம், 28—4—68 பிற்பகல் 2-மணிக்கு ரெட்டியூர் ஐந்து ரோடு இண்டியன் ஆயில் கம்பெனி எதிரில் உள்ள கட்டிடத்தில் நடைபெறும்; உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு வட்டச் செயலாளர் எஸ். ஏ. அன்புக்கரசு கேட்டுக்கொள்கிறார்.

### திருவாடானை வட்டம்

திருவாடானை வட்ட தி. மு. க. செயலாளர்கள், புதிய கிளைகளின் அமைப்பாளர்கள் கூட்டம், 28—4—68 பகல் 1-மணிக்கு திருவாடானை செயலாளர் இல்லத்தில் நடைபெறும்; புதிய கிளை அமைப்பாளரும் ஒரு பிரதிநிதியும் வந்து கலந்துகொள்ளுமாறு வட்டச் செயலாளர் நவமார்க்கண்டேயன் கேட்டுக்கொள்கிறார்.

### கடலூர் வட்டம்

கடலூர் வட்ட தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டம், 28—4—68 காலை 10-மணிக்கு நெல்லிக்குப்பம் கிரிஜா பேலஸ் கூடத்தில் நடைபெறும்; வட்டக் கழக உறுப்பினர் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு வட்டச் செயலாளர் ஏ. வி. தண்டபாணி கேட்டுக்கொள்கிறார்.

# சிற்றூர்--பேரூர்க் கிளைகள்; நகர--பெருநகர உட்கிளைத் தேர்தல்கள்

## 1968 மே 4, 5 (சனி--ஞாயிறு)

1. புதிய சட்ட திட்டப்படியும், பொதுச்செயலாளர் அவர்கள் அறிக்கைப்படியும், முறைப்படி உறுப்பினர்களைச் சேர்த்தும் புதுப்பித்தும் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிப் பதிவு செய்யப்பட்ட எல்லா சிற்றூர்—பேரூர்க் கிளைகள், நகர—பெருநகர உட்கிளைகள் (வார்டு கிளைகள்) ஆகியவற்றின் தேர்தல்கள், 1968 மே திங்கள் 4, 5 (சனி, ஞாயிறு) ஆகிய இரு நாட்களில் நடைபெற வேண்டும்.

2. சிற்றூர்க் கிளை, நகர–பெருநகர உட்கிளை (வார்டு கிளை) ஆகியவற்றின் தேர்தல்களை நடத்திவைக்கத் தேர்தல் கூட்டத்தில் கூடியிருக்கும் உறுப்பினர்கள், தங்களுள் ஒருவரைத் தேர்தல் ஆணையாளராகத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். அவர், அன்று நடைபெறும் எந்தத் தேர்தலிலும் போட்டியிடாதவராக இருக்கவேண்டும்.

3. பேரூர்க் கிளையின் தேர்தல்கள், வட்டக் கழகச் செயலாளரால் அனுப்பி வைக்கப்பெறும் ஆணையாளரின் தலைமையில் நடைபெற வேண்டும்.

4. தேர்தல் நடைபெறும் இடம்—நேரம் ஆகியவைகளை, கிளையின் பொது உறுப்பினர் அனைவரும் தெரிந்துகொள்ளும் வகையில் அந்தந்தக் கிளையின் செயலாளரோ அல்லது அமைப்பாளரோ, முறைப்படி முன்கூட்டியே அறிவிக்க வேண்டும்.

5. தலைமைக் கழகத்தில் பதிவுசெய்யப் பெற்று, அந்தந்தக் கிளையின் செயலாளர் அல்லது அமைப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் (கார்டுகள்), அந்தந்த உறுப்பினர்களுக்குத் தேர்தல் நாளுக்குள், அந்தந்தக் கிளையின் செயலாளர் அல்லது அமைப்பாளரால் வழங்கப்பட்டுவிடுதல் வேண்டும். தலைமைக் கழகத்தால் அனுப்பி வைக்கப்பெற்று—ஆனால், அந்தந்த உறுப்பினர்களுக்கு உரிமைச் சீட்டுக்களை வழங்காத செயலாளர் அல்லது அமைப்பாளர் பேரில் முறைப்படி புகார் செய்யப்படுமானால் அவர்கள்மீது முறைப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

6. தேர்தல் கூட்டத்திற்கு ஆணையாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்லது வட்டச் செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்டவர் தமது பொறுப்பை ஏற்றதும், அந்தந்தக் கிளையின் செயலாளர் அல்லது அமைப்பாளர், தமக்குத் தலைமைக் கழகத்திலிருந்து உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களோடு அனுப்பி வைக்கப்பெற்ற உறுப்பினர் பதிவு விவரத் தாள்கள் முழுவதையும் தேர்தல் ஆணையாளரிடம் ஒப்படைத்துவிட வேண்டும்; அத்துடன், தலைமைக் கழகத்திலிருந்து அந்தந்தக் கிளையின் செயலாளர் அல்லது அமைப்பாளர்களுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள சட்ட திட்டப் பிரதி—தேர்தல் விதி முறைப் பிரதி—தேர்தல் முடிவுத் தாள்கள்—தேர்தல் வேட்பாளர்கள் ஆணையாளரிடம் செலுத்திய தொகை பற்றிய விவரம் அறிவிக்கும் தாள் ஆகியவற்றையும் அவரிடம் ஒப்படைத்துவிட வேண்டும். தம்மிடம் ஒப்படைக்கப்பட்டவைகளை--தேர்தல் முடிந்ததும்--தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளரிடம் ஆணையாளர் அளித்து தலைமைக் கழகத்திற்கு உடன் அனுப்ப வேண்டியவைகளை முறைப்படி அனுப்பிவைப்பார்.

7. தேர்தல் கூட்டத்தில் கலந்துகொள்ளவும், வாக்களிக்கவும், போட்டியிடவும் விரும்புபவர் நடைமுறைக் காலத்திற்கான உறுப்பினர் உரிமைச் சீட்டைப் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

8. ஒரு அமைப்புக்குரிய தேர்தல், அந்தந்த அமைப்புக்குட்பட்ட இடத்திலேயே--அந்தந்த அமைப்பின் உறுப்பினர்களைக் கொண்டு நடத்தப்படல் வேண்டும்.

9. தேர்தல் கூட்டத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள், தங்கள் தங்கள் உறுப்பினர் உரிமைச் சீட்டை உடன் கொண்டுவர வேண்டும். உடன் கொண்டுவராத முறையான உறுப்பினரைப் பொறுத்துத தேர்தல் ஆணையாளர், தம்மிடம் கிளையின் செயலாளர் அல்லது அமைப்பாளரால் (6-வது பாராவில் கண்டுள்ளபடி) ஒப்படைக்கப்பட்ட கிளைக் கழக உறுப்பினர் பதிவு விவரச் சீட்டில் ஆய்ந்து பார்த்து, தகுதியான--முறையான உறுப்பினர் எனத் தெளிந்தும், அங்கு கூடியுள்ள இரு உறுப்பினர்களிடம் உறுதிமொழி பெற்றும், கார்டு கொண்டுவராத உறுப்பினரைத் தேர்தல் கூட்டத்தில் பங்குகொள்ள அனுமதிக்கலாம்.

10. கிளையின் தேர்தல்களில், முறையே அவைத் தலைவர் ஒருவர்—செயலாளர் ஒருவர்—துணைச் செயலாளர் ஒருவர்—பொருளாளர் ஒருவர்—மேலமைப்புப் பிரதிநிதி ஒருவர்—என்ற வரிசைப்படி தேர்ந்தெடுக்கும் தேர்தல்கள் முடிந்த பிறகு, இவர்களைத் தவிர—சிற்றூர்க் கிளையாயிருப்பின் 8 செயற்குழு உறுப்பினர்கள் வரையிலும், பேரூர்க் கிளையாயிருப்பின் 14 செயற்குழு உறுப்பினர்கள் வரையிலும், நகர--பெருநகர உட்கிளை (வார்டு கிளை)யாக இருப்பின் 10 செயற்குழு உறுப்பினர் வரையிலும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

11. எந்த ஒரு பதவிக்கான தேர்தலானாலும், அதில் போட்டியிட விரும்புகிறவர் அதற்குரிய விண்ணப்பத் தாளை நிறைவு செய்து, முன்மொழிபவர்--வழிமொழிபவர் கையொப்பங்களுடன், போட்டியிடுபவரோ முன்மொழிபவரோ வழிமொழிபவரோ தேர்தல் ஆணையாளரிடம், முறைப்படி உரிய கட்டணத்துடன் சேர்ப்பிக்க வேண்டும்.

12. சிற்றூர்—பேரூர், நகர—பெருநகர உட்கிளைத் தேர்தல்களில், எந்தப் பொறுப்புக்கும் போட்டியிடும் தோழர்கள் தங்கள் தங்கள் வேட்பாளர் விண்ணப்பத்தாளுடன் ரூ. 1. விண்ணப்பக் கட்டணமாகத் தேர்தல் ஆணையாளரிடம் செலுத்தி அவர் கொடுக்கும் இரசீதினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்தத் தொகை, போட்டியிடுவதிலிருந்து முன்கூட்டியே விலகிக்கொண்டால் தவிர, எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

13. அந்தந்தப் பொறுப்புக்களுக்குப் போட்டியிட்ட தோழர்கள் அனைவராலும் செலுத்தப்பட்ட தொகை முழுவதையும், முறைப்படி தலைமைக் கழகத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்கும் பொறுப்பைத் தேர்தல் ஆணையாளரும், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளரும ஏற்கவேண்டும்.

14. போட்டியிட்ட தோழர்களால் விண்ணப்பத் தாள்களுடன் செலுத்தப்பட்ட தொகை பற்றிய விவரத்தை, அதற்கெனத் தலைமைக் கழகத்தால் அனுப்பி வைக்கப்பட்ட தாளில் முறைப்படி நிறைவு செய்து, அந்தத் தாளைத் தேர்தல் முடிவுத் தாளுடனும், தொகையைப் பணவிடை (மணியார்டர்) மூலமும் உடனடியாகத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவிட வேண்டும். தொகை அனுப்பும் செலவை (மணியார்டர் கமிஷன் மட்டும்) அனுப்பும் தொகையிலேயே கழித்து அனுப்பலாம்.

15. தேர்தல்கள் முடிந்ததும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் விவரங்களைத் தலைமைக் கழகத்திலிருந்து ஒவ்வொரு கிளைக்கும் நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் தேர்தல் முடிவுகள் தெரிவிக்கும் தாளில், தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலாளர்களின் பெயர்—முகவரிகளைத் தெளிவாக எழுதி, தேர்தல் ஆணையாளர், தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளர் ஆகியோரின் கையொப்பங்களுடன், 8—5—68-ஆம் நாளுக்குள் கிடைக்கும் வகையில் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவிட வேண்டும். அதேபோல், மாவட்டக் கழகத்திற்கு ஒரு தாளையும், வட்டக் கழகத்திற்கு ஒரு தாளையும், நகர--பெருநகர உட்கிளையாயிருப்பின் நகரக் கழகத்திற்கு ஒரு தாளையும் நிறைவு செய்து உடன் அனுப்பிவிட வேண்டும். (தலைமைக் கழகத்திலிருந்து சிற்றூர்--பேரூர்க் கிளைகளுக்கு மூன்று தாள்களும், நகர உட்கிளைகளுக்கு நான்கு தாள்களும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன).

16. ஆந்திர--கருநாடக--கேரள மாநிலக் கிளைகளின் தேர்தல்கள், இதில் காணப்படும் முறைகளின்படியே மே 18, 19 ஆகிய நாட்களில் நடைபெறும்.

17. தேர்தல் பற்றிய மற்ற விவரங்களை, ஒவ்வொரு கிளைக்கும் தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ள 'தேர்தல் விதிமுறைகள்' என்ற வெளியீட்டில் காணலாம்.

'அறிவகம்', சென்னை-13
25—4—68

---தலைமைக் கழகம் (தி.மு.க.)

# ஆந்திர அமைச்சரின் பேச்சுக்குக் கண்டனம்

## பதவியிலிருந்து விலகுமாறு நாடாளுமன்றத்தில் வற்புறுத்தல்,

புதுடில்லி, பிப். 26—

"'தாழ்த்தப்பட்ட மக்கள் தாக்கப்பட வேண்டியவர்கள்' என்று பேசிய ஆந்திர மாநில வேளாண்மைத் துறை அமைச்சர், பதவியிலிருந்து விலகவேண்டும்"

என்று காங்கிரசு உறுப்பினர் ஷியோ நாராயண் என்பவர், நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

"ஆந்திர மாநில அமைச்சரின் பேச்சு, வரம்புமீறியது" என்று சொன்னவுடன், நாடாளுமன்றத்தில் உள்ள எல்லாத் தரப்பினரும், 'வெட்கம், வெட்கம்' என்று குரலெழுப்பினர்.

"இப்படிப்பட்ட போக்கில் பேசிய அமைச்சரைப் பதவியிலிருந்து விலக்குவதுடன், காங்கிரசுக் கட்சியிலிருந்தும் வெளியேற்ற வேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"உள்துறை அமைச்சர் இவ்விவாரம் குறித்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்வரையில், உறுப்பினர்கள் அனைவரும் பொறுத்துக்கொள்ளவேண்டும்" என்று அவைத் தலைவர் சஞ்சீவ ரெட்டி, உறுப்பினர்களை வேண்டிக்கொண்டார்.

# செங்கற்பட்டு மாவட்ட கி. உ. மாநாடு

## அமைச்சர் கே. ஏ. மதியழகன் கலந்துகொள்கிறார்

செங்கற்பட்டு மாவட்ட கிராம உத்தியோகஸ்தர்கள் ஆறுவது மாநாடு, 28—4—68 காலை 10 மணிக்கு திருத்தணி உயர்நிலைப் பள்ளியில் நடைபெறும்; தலைவர்: டி. கே. பொன்னுவேலு பி.ஏ., எம்.எல்.சி.; திறப்பாளர்: அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன்; கொடியேற்றுபவர்: என். இராசேந்திரன்; பேசுவோர்: வி. ஏ. எத்திராசன், சி. வி. எம். அண்ணாமலை எம்.எல்.ஏ., கே. விநாயகம் எம்.எல்.ஏ., டி. இராசரத்தினம் எம்.எல்.ஏ., முனு. ஆதி எம்.எல்.ஏ., சி. வி. இராசகோபால் எம்.எல்.சி.

# திருப்பாசூர்

## முத்தமிழ் மன்றத் திறப்பு விழா

திருப்பாசூர் முத்தமிழ் மன்றத் திறப்பு விழா, 28—4—68 மாலை 6-மணிக்கு புதிய திருப்பாசூரில் திரு. து. எத்திராசன் தலைமையில் நடைபெறும்; வழக்கறிஞர் செல்வராசு திறந்துவைப்பார்; வழக்கறிஞர் டி. நாகரத்தினம் இனிப்பு வழங்குவார்; தோழர்கள் நீடின்பன், டி. ஆர். வரதன் ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை,13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.